செ.வெ.எண்: 914/2017 நாள்: 06.12.2017

தமிழகத்தில் "ஓகி" புயல் காரணமாககன்னியாகுமரிமாவட்டத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறையினால் பல்வேறுமுன்னெச்சரிக்கைமற்றும் நோய் தடுப்புநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.பொதுமக்களுக்குதேவைப்படக்கூடியமருத்துவசிகிச்சை அளிக்கும் முகமாகபாதிப்புக்குள்ளானபகுதிகளில் அரசுமருத்துவமனைகள் மற்றும் அரசுஆரம்பசுகாதாரநிலையங்கள் தவிர கூடுதலாக 55 சிறப்புமருத்துவகுழுக்கள் பாதிக்கப்பட்டபகுதிகளுக்குச்சென்றுபொதுமக்களுக்குதேவையானமருத்துவசிகிட்சைவழங்கிவருகின்றன. இதன்மூலம் இதுவரை 6109 நபர்கள் சிகிட்சைபெற்றுள்ளனர். இந்தமாவட்டத்தில் தேவையான அளவுமருந்துகள்,மாத்திரைகள்,சிரப்மற்றும் களிம்புகள் ஆகியவை இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. மேலும் கூடுதலானபிறமாவட்டங்களில் இருந்து 15 நடமாடும் மருத்துவகுழுக்களும் பூச்சியியல் வல்லுநர்கள் அடங்கியகுழுக்களும் கூடுதல் புகை மருந்துவாகனங்களும்வரவழைக்கப்பட்டுள்ளது.

பொதுசுகாதாரத் துறையினால் தண்ணீர் மூலம் பரவும் வயிற்றுப்போக்குஉள்ளிட்டதொற்றுநோய்கள் தீவிரமாககண்காணிக்கப்பட்டுவருகிறது. மேலும் குடிநீரில்குளோரின்கலந்துவிநியோகிக்கப்படுவதைசுகாதாரஆய்வாளர்கள் அடங்கியகுளோரின் பரிசோதனைகுழுக்கள் மூலம் உறுதிசெய்யப்படுகிறது. இதற்காக 9 குளோரின் பரிசோதனைகுழுக்கள் செயல்படுகின்றன. டேங்கர் லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீரிலும் போதியஅளவுகுளோரின் கலந்துவிநியோகிக்கப்படுவதைஉறுதிசெய்யும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது. குடிநீரில் குறைந்தபட்சம் 0.5 பி.பி.எம்(PPM) அளவுகுளோரின் இருக்குமாறுஉறுதிசெய்யப்படுகிறது.

பொதுமக்களுக்கு,பாதிக்கப்பட்டபகுதிகளில் கடைபிடிக்கவேண்டியசுகாதாரஆலோசனைகள் அடங்கியதுண்டுபிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுவருகிறது. உணவுபாதுகாப்புத் துறையினால் தங்கும் மற்றும் உணவுவிடுதிகளில் சுகாதாரம் பேணப்பட்டுபாதுகாப்பானகுடிநீர் மற்றும் உணவு வகைகள் வழங்கப்படுகிறதாஎனஉறுதிசெய்யப்படுகிறது. உள்ளாட்சிஅமைப்பு மூலமாகபிளிச்சிங் பவுடர் கிருமிநாசினிதண்ணீர் வடிந்த இடங்களில் தெளிக்கப்படுகிறது. கூடுதலாக 40 டன் பிளிச்சிங் பவுடர் இந்தமாவட்டத்திற்குவழங்கப்பட்டுள்ளது. மருத்துவக் கல்லூரிமருத்துவமனை, இதரஅரசுமருத்துவமனைகள் மற்றும் 3 மேம்படுத்தபட்டஅரசுசுகாதாரநிலையங்களில் மின்சாரம் சீர் செய்யப்பட்டுள்ளது. அவசரதேவைக்காகமின் விநியோகம் தடையில்லாமல் கிடைக்க ஜெனரேட்டர் மற்றும் தேவையானடீசல் போன்றவைதயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் பொதுமக்களுக்குதேவையானசுகாதாரஆலோசனைகளுக்காக 104 மற்றும் 1077 மற்றும் 24 மணிநேரகட்டுப்பட்டுமையஎண்களான 044-24350496/ 24334811/9444340496 ஆகியவற்றைதொடர்புகொண்டுதேவையானஆலோசனைகளைபெற்றுக் கொள்ளலாம்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்.கன்னியாகுமரி மாவட்டம்